# கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களின்

# கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

# சென்னை/19.10.2012

அன்பார்ந்த தோழர்களே,

வணக்கம்,

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் மிகப்பெரிய சேவைத்துறை நிறுவனமாகும். தமிழக மக்களுக்கும் மற்றும் விவசாயம், தொழில் வளர்ச்சிக்கும் தேவையான மின்சாரத்தை வழங்குவதே இதன் பிரதான வேலையாகும். மக்களுக்கு மின்சாரம் வழங்கும் வேலையை களப்பிரிவு ஊழியர்களும், வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான தொகையை கணக்கீடு செய்து வசூல் செய்யும் வேலையை கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களும், இவர்களின் பணிச்சார்ந்த வேலைகளை நிர்வாகம் மற்றும் கணக்குப்பிரிவு ஊழியர்களும் செய்து வருகிறார்கள்.

இவர்களில் வாரியத்தின் வருமானத்திற்கு முக்கிய காரணமாக விளங்குபவர்கள் கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் ஆவார்கள். இப்பிரிவில் சுமார் 12,000 ஊழியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் அட்டைப்பட்டியல் முறையை 1980ம் ஆண்டு அப்போதைய மின்துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அறிமுகப்படுத்தினார். கணக்கெடுப்பவர், பட்டியல் தயார் செய்பவர், பட்டியல் விநியோகம் செய்பவர், பண வசூல் செய்பவர் என்று நான்கு பேர்கள் செய்து வந்த மின்கட்டண கணக்கெடுப்பு பணியை ஒருவரே செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆட்குறைப்புக்கான திட்டம் என்பதால் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்தது. வழக்கம் போல நிர்வாகத்திற்கு ஆதரவான நிலை எடுத்த சில சங்கங்கள் இத்திட்டத்தை ஆதரித்தன.

அட்டைப்பட்டியல், திருத்தப்பட்ட அட்டைப்பட்டியலாக 1985ல் மாற்றம் செய்யப்பட்டது. 1987முதல் இருமாதத்திற்கு ஒருமுறை கணக்கெடுப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது. 2005 முதல் மாதம்தோறும் கணக்கெடுக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை அனைத்திலும் மக்கள் சேவை என்பதைவிடவும் ஆட்குறைப்பு நோக்கமே அதிகமாக இருந்ததால் தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு இத்திட்டத்தை எதிர்த்து வந்துள்ளது.

கணக்கீட்டு பிரிவில் பணிபுரியும் ஊழியர்கள் ஏனைய பிரிவு ஊழியர்களைவிடவும் மிகப்பெரிய பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள். 08.07.1998 இருதரப்பு ஒப்பந்தப்படி பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வுகள் வழங்கப்படாததால் இரண்டு பதவி உயர்வோடு பணி ஓய்வு பெற்று செல்லும் அவலநிலை இப்பிரிவில் மட்டுமே தொடர்கிறது.

ஒரே சம்பளவிகிதத்தில் (Scale of Pay) பணியில் சேர்ந்த ஒரே தகுதியுடைய இளநிலை உதவியாளர் தற்போது கணக்கு அலுவலராகவோ, நிர்வாக அலுவலராகவோ பணிபுரிந்து கொண்டிருக்க, கணக்கீட்டாளராக பணியில் சேர்ந்தவர் இரண்டாவது பதவி உயர்வான வருவாய் மேற்பார்வையாளராக பணிசெய்து கொண்டிருப்பார். அந்த பதவியிலேயே பணி ஓய்வும் பெற்றிடும் பரிதாபம் இன்றும் தொடர்கிறது. எதிர்காலத்திலும் இந்த நிலையே நீடிக்கும்.

வேலைபளுவினாலும், கணினி கோளாறினாலும், கவலையிலும், மனஅழுத்தத்திலும் பணிபுரியும் இப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகள் நிர்வாகத்தால் தொடர்ந்து அலட்சியப் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழக அரசின் / மின்சார வாரியத்தின் கவனத்தை நமது நியாயமான, நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் கோரிக்கைகளின் மீது ஈர்ப்பதற்காக **19.10.2012 அன்று சென்னை தலைமையம் முன்பாக நடைபெறும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள அலைகடலென ஆர்ப்பரித்து வருமாறு உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

**சினந்து நிற்கும் சிங்கக் கூட்டம்**
**சீறி வரட்டும் சென்னை நோக்கி.**
**பொறுத்தது போதும் புயலென காட்டிட**
**போர்ப்பறை கொட்டி புறப்படு தோழா!**

## கோரிக்கைகள்

- கணக்கீட்டாளர் II-ம் நிலை அகற்றி கணக்கீட்டாளராக பணியமர்வு செய்தல்,
- பதவி உயர்வு தேக்க நிலையை அகற்ற பணிக்காலத்தில் மூன்று பதவி உயர்வுகள் உத்தரவாதப்படுத்துதல்.
- அனைத்து கோட்டங்களுக்கும் கணக்கீட்டு அலுவலர் பதவியினை உருவாக்குதல்.
- கணக்குப் பிரிவில் உள்ளதைப்போல கணக்கீட்டுப் பிரிவிலும் எட்டு அடுக்கு பதவி உயர்வு வாய்ப்பினை உருவாக்க வேண்டுதல்.
- வசூல் மையங்களின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் வசூல் பணியில் அறிமுகப்படுத்தப்படும் Outsoursing முறையை ரத்து செய்தல்
- மின்நுகர்வோர்க்குரிய சேவை பாதிக்காத வகையில் எப்போதும் கணக்கீட்டுப் பிரிவில் கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் பழுதடையாமல் இருக்கவும், மேலும் இணையதள சேவைகள் தடைபடாமல் இருக்கவும் உத்தரவாதப்படுத்த வேண்டுதல்.
- 1982ம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட கணக்கீட்டாளர்களின் முதல் ஒன்றரை ஆண்டு பணிக்காலம் ஓய்வூதியம் கணக்கீடு செய்வதற்கு சேர்த்துக் கொள்ள வேண்டுதல்.
- ஆண்டுதோறும் கூடுதலாக வழங்கப்படும் மின்இணைப்புகளுக்கு ஏற்ப புதிய பதவிகள் அனுமதிக்கப்பட்டு நிரப்பிட வேண்டுதல்.
- முப்பது நாள் கணக்கீடு, முப்பது நாள் வசூல் முறை இரத்து செய்யப்பட வேண்டுதல்.
- கணக்கீட்டாளரிலிருந்து தகுதிவாய்ந்த, விருப்பப்படுகிற ஊழியர்களை உள்முகத் தேர்வு மூலம் விரும்பும் பணியில் சேர்வதற்கு அனுமதிக்க வேண்டுதல்.
- விரும்புகின்ற / பெண் கணக்கீட்டாளர்களுக்கு மாற்றுப் பணியில் பணிபுரிய அனுமதிக்க வேண்டுதல்.
- அக்கவுண்டன்சி தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஒரு ஆண்டு உயர்வு வழங்க வேண்டுதல்.
- 25 ஆண்டுகள் பணிமுடித்த கணக்கீட்டுப்பிரிவு ஊழியர்களுக்கு கணக்கீட்டு அலுவலர் சம்பளம் வழங்க வேண்டுதல்.
- உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் உதவி கணக்கீட்டு அலுவலர் பதவியும், மத்திய அலுவலகத்தில் சிறப்பு நிலை கணக்கீட்டு அலுவலர் பதவியும், மண்டல அலுவலகத்தில் முதன்மை கணக்கீட்டு அலுவலர் பதவியும் புதியதாக அனுமதிக்க வேண்டுதல்.

CITU

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு
. . . . . . . . . . கிளை